
தொகுதி 1

# திருத்தொண்டர் கதைகள்

சித்திர வடிவில்



திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக்குழு, சிங்கப்பூர்

2020

# திருத்தொண்டர் கதைகள்

(சித்திர வடிவில்)

தொண்டு செய்பவர்கள் தொண்டர்கள். தொண்டு என்பதற்குப் பணி செய்து கிடத்தல் என்பது நாவுக்கரசர் தரும் விளக்கம். யாருக்குத் தொண்டு செய்தல்? சிவனுக்கும் சிவனடியாருக்கும் தொண்டு செய்பவர்கள் திருத்தொண்டர்கள் ஆவர். "திருவே என் செல்வமே" என்ற தேவார வாக்கும், "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்" என்னும் பெரியபுராணத் தொடரும் இதனை மெய்ப்பிக்கும். இத்தகைய திருத்தொண்டர் பெருமை சொல்லவும் அரிதே என்று கூறும் ஔவையார், "இறைவனோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்" என்று அதற்குரிய காரணத்தையும் சொல்கிறார். "பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்" என்று இறைவனே சுந்தரருக்குச் சொல்லியதாகப் பெரிய புராணம் இதனைப் பேசும்.


இத்தகைய திருத்தொண்டர்களைத் தொகை அடியார்கள் என்றும் தனியடியார்கள் என்றும் இருவகையாகப் பேசும் பெரியபுராணம். திருத்தொண்டர் வரலாற்றைச் சொல்லோவியமாகக் காட்டிய பெரியபுராணத்தைப் பின்பற்றி அவர்களின் கதையைச் சித்திரவடிவில் தீட்டியதே இந்நூல். தொகையடியார்களில் ஒருவராகிய தில்லைவாழ் அந்தணர் பற்றியது முதல் கதை, நடராசப் பெருமான், திருத்தொண்டத்தொகை பாடவிரும்பிய சுந்தரருக்கு அடியெடுத்துக் கொடுத்தபோது கூறியதாகும். அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழு கலான் என்பது வள்ளுவம் அல்லவா? இரண்டாவது இளையான்குடிமாறனார் கதை. சிவனடியாருக்கு நள்ளிருளில் மழை பெய்தபோதும் தம் குறிக்கோளாகிய விருந்தோம்பும் செயலை விடாது பின்பற்றியவர் கதை. "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்பதும் திருவள்ளுவர் கூற்று அன்றோ? மூன்றாவது கதை மெய்ப்பொருள் நாயனார் கதை. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்னும் வள்ளுவர் வாக்குப்படி பகைவனுக்கு அருளிய நன்னெஞ்சினர் கதை. இம்மூன்று தொண்டர்களின் கதைகள் இளையர் நெஞ்சில் பதியும் வண்ணம் சித்திரங்களைத் தீட்டிச் சிறுநூலாகச் சிங்கப்பூர்த் திருமுறை மாநாட்டினர் வெளியிட்டுள்ளனர். இதனைப் படிக்கும் இளையர்கள், சிறுவர்கள் எல்லாரது இதயத்திலும் இந்நூல் 'சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரையாக' நிலைத்து இருக்கும் என்று நம்புகிறேன்.

திருமுறை மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவினருக்காக இந்நூலிலுள்ள பெரிய புராணக்கதையைச் சித்திரவடிவில் ஆக்கித் தந்த சிவத்திரு சு நாகராஜன், அருமையான ஓவியங்களைத் தீட்டிய திருமதி காயத்ரி சங்கரநாராயணன், புத்தகமாக வடிவமைத்துத் தந்த சிவத்திரு மோனா பிரிண்டர்ஸ் வெங்கடேஷ், தட்டச்சுச் செய்த சுப்ரியா கோபால், உருவாக்கப் பல வகையிலும் உதவிய சிங்கைச் சிவனடியார்கள் ஆகிய அனைவர்க்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் சுப திண்ணப்பன்**


ஆலோசகர், திருமுறை மாநாட்டு
ஏற்பாட்டுக்குழு, சிங்கப்பூர்

1-12-2020



தில்லைவாழ் அந்தணர்கள்
“தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்” எனச் சுந்தர மூர்த்தி நாயனாரால் அடியார் பெருமக்களில் முதலாவதாக வைத்துப் போற்றப்படுபவர்கள்.



தில்லைவாழ் அந்தணர்களாகிய நாங்கள் கூத்தப் பெருமானையே வழிபட்டு நிற்பவர்கள்.



சோழ மன்னன் ஒருவன் தில்லைக் கோயிலுக்கு வரும்பொழுது தில்லைவாழ் அந்தணர்களை கண்டு வணங்குகிறான்.


சைவநெறியில் திளைத்து நிற்கும் சோழ மன்னா! நாங்கள் 2999 பேர்தான். தில்லையில் ஆடும் ஈசன் நடராச மூர்த்தியும் எங்களில் ஒருவராவார். எனவே நாங்கள் மூவாயிரம் பேர் ஆனோம்


உலகம் அருள்பெற்று வாழும் பொருட்டு முறைப்படி ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினியம், என்ற மூன்று வேள்விகளைச் செய்து வருகிறோம்.


நாங்கள் நாள்தோறும் தில்லை நடராசப்பெருமானின் திருநடனத்தைப் போற்றி வாழ்பவர்கள்.


நாங்கள் வேதம் ஓதி முறைப்படி நடராசப் பெருமானுக்கு வழிபாடு, விழாக்கள் முதலியவற்றை செய்து வருகிறோம்.



சிவன் திருவடியில் பதிந்த அன்பு ஒன்றே போதும் என்று எண்ணும் பெருவாழ்வு உடையவர்கள் நாங்கள்.
தில்லைவாழ் அந்தணர் புராணம் நிறைவு



இளையான்குடி
மாறனார்
புராணம்


இளையான்குடி என்ற ஊரில் மாறன் என்ற செல்வந்தர் வாழ்ந்து வருகிறார். சிவனடியார்களுக்கு உணவளிப்பதே பெரும் பணியாகக் கருதிச் செயல்பட்டு வருகிறார்.
அடியார் பெருமக்களே! நான் உய்யும் பொருட்டு நீங்கள் பசியாற உண்ண வேண்டுகிறேன்.


எக்காலத்தும் அடியார்களுக்கு உணவு அளித்து வரும் மாறனாரே! உமது சிவத்தொண்டு உன்னதமானது.
எல்லாம் சிவனருள்



மாறனாரைப் போன்று சிவனடியார் மனம் கோணாது உணவளிக்க வல்லார் எவருமே இருக்க இயலாது!!
ஆம் ஐயா செல்வத்தால் மட்டுமல்ல உள்ளத்தாலும் உயர்ந்தவர்



மாறனாரின் இப்பணியை உலகறியச் செய்ய, இறைவன் மாறனாரின் செல்வமெல்லாம் இழக்கச் செய்து அவரை ஏழையாக்குகிறார்.
என் அன்பிற்குரியவளே, நம்மிடம் ஏதும் இல்லாமையால் பசி வாட்டுகிறது. சரி இரவாகி விட்டது. இறைவனை எண்ணித் தூங்குவோம்.
தாங்கள் கலங்க வேண்டாம். இறைவர் நல்ல வழிகாட்டுவார்.


இறைவனார் ஒரு துறவி வேடம் தரித்து மாறனார் வீட்டிற்கு வருகிறார்...
மாறனாரே நல்ல பசியாக இருக்கிறது எனக்கு ஏதாவது உணவு அளிப்பீரா?
வரவேண்டும் ஐயா
மாறனார் வீட்டிற்குள் சென்று மனைவியிடம்
அன்பிற்குரியவளே, அடியார் ஒருவர் உணவின் பொருட்டு நம்மைத் தேடி வந்துள்ளார். என்ன செய்வது?
என்ன செய்வது? அடியாரின் பசியைப் போக்க இயலவில்லையே! இந்த மழை பெய்யும் இரவு வேளையில் எவர் உதவுவார்?
சரி வேறு என்னதான் செய்வது?
ஓர் உபாயம் கூறுகிறேன். காலையில் வயலில் விதைத்த முளை நெல்லை வாரிக் கொண்டு வாருங்கள். தக்க முறையில் சமைத்துத் தருகிறேன்.



சரி, அதுதான் ஒரே வழி, இப்போதே போகிறேன்
நான் உணவு தயாரிக்க ஏற்பாடு செய்கிறேன்.
இரவு நேரம் மாறனார் வயலுக்குச் செல்கிறார். வயலில் மழை நீர் நிரம்பி நிற்கிறது
காலால் தடவிப் பார்ப்போம்…. ஆ முளை மேலே தென்படுகிறது அவற்றைப் பறித்து எடுப்போம்.
வீட்டினுள்
இதோ நெல் முளைகளைக் கொண்டு வந்துவிட்டேன் சீக்கிரமே உணவு தயார் செய்
ஐயகோ! இந்த இரவு வேளையில் உணவு தயாரிக்க விறகுக்கு என்ன பண்ணுவது என்று தெரியவில்லையே?



மாறனார் வீட்டின் கூரையைப் பிரித்து மனைவியிடம் கொடுக்கிறார்


உடன் வைக்க கறிகளுக்கு என்ன செய்வது?
இதோ வருகிறேன்


மாறனார் கொல்லைப் புறத்தில் உள்ள கீரைகளைப் பறித்து வருகிறார்
இதோ சீக்கிரம் ஆகட்டும்.
சரி! கணத்தில் தயாரித்து விடுகிறேன்



வீட்டின் முன் அறையில் துயிலும் துறவியாரை மாறனார் எழுப்புகிறார்.
ஐயா எழுந்திருங்கள் உணவு தயாராகிவிட்டது
வந்திருந்த துறவி திடீரென ஒரு சோதியாய் ஒளியாய்த் தோன்றுகிறார்
ஆ! என்ன விந்தை
அன்பனே! அடியார் பூசையைத் தவறாது செய்த நீ உன் மனைவியோடு எம் உலகம் வந்து, எல்லாச் செல்வங்களும் பெற்று நலமுடன் வாழ்வாயாக!!
ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய



மெய்ப்பொருள் நாயனார்
புராணம்



சேதிநாட்டு திருக்கோவலூர் அரண்மனை.
மன்னர் மெய்ப்பொருள் நாயனார் அரசவை
என்ன காரியம் செய்தீர்? அடியார்கள் காத்திருக்கலாமா? உடனே வரச் சொல்
வாழ்க சேதிநாடு!! வாழ்க மாமன்னர்!! தங்களைக் காணச் சிவனடியார்கள் வாயிலில் காத்து நிற்கின்றனர்.



நீதி வழுவாது ஆட்சிசெய்யும் மன்னா! எங்களுக்கு ஒரு வேண்டுகோள்.


தயக்கமின்றிக் கூறுங்கள் அடியார் பெருமக்களே.



நமது திருநாட்டில் சிவ பூஜைகள் தினமும் தவறாமல் நடைபெறத் தாங்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்
அப்படியே ஆகட்டும்!


அண்டை நாட்டு மன்னன் முத்தநாதன் பலமுறை மெய்ப்பொருளாரோடு போரிட்டுத் தோல்வியில் துவண்டு போனவன்.
எத்தனை முறை போரிட்டும் மெய்ப்பொருளாரை வெற்றி கொள்ள முடியவில்லையே? என்ன செய்யலாம்?
ஆம் நண்பரே! இனி சூழ்ச்சிச் செய்தாவது அவரை வீழ்த்த வேண்டும்



சரி சூழ்ச்சித் திட்டத்தை எவ்வாறு செயல்படுத்தலாம்?


தாங்கள் சிவ வேடம் தரித்து, மெய்ப்பொருளாரின் அறைக்குள் சென்று கத்தியால் குத்திக் கொன்று விடுங்கள். அதைத் தவிர வேறுவழி இல்லை.


இதில் நமக்கு ஆபத்து நேரிடாதா?
நிச்சயமாக ஏற்படாது. சிவனடியார் கோலத்தில் உள்ளவருக்கு எந்தத் தீங்கும் ஏற்பட மெய்ப்பொருளார் அனுமதிக்க மாட்டார்
அதுவே சிறந்த வழி! நானே நேரில் செல்கிறேன்!
முத்தநாதன் மேனியெங்கும் திருநீறு பூசி முழுச் சிவக் கோலத்தில் கையில் ஆயுதம் மறைத்து வைத்துக் கொண்டு வருகிறான். மன்னனின் மெய்க்காவலன் தத்தன், மன்னன் அறையின் முன்னே நிற்கிறான்.
அடியார் பெருமானே அரசர் துயில் கொள்கிறார். அவரைச் சந்திக்க இயலாது.
இறைவனின் மெய்ப்பொருளைச் சொல்ல காலநேரமில்லை மன்னனிடம் சொல்.


முத்தநாதன் உள்ளே செல்கிறார். அரச மாதேவி மன்னனை எழுப்புகிறார்.
வாருங்கள் அடியார்களே வணக்கம். தாங்கள் எனக்குக் கொண்டு வந்த சேதி என்னவோ?
மன்னவா அதைத் தனிமையில் கூற வேண்டும். அரசமாதேவி இந்த இடத்தை விட்டு நீங்க வேண்டும்.


அரசமாதேவி அறையை விட்டு வெளியேறுகிறார். மன்னவன் மண்டியிட்டு உட்கார்ந்து...
இனி அருள் செய்க


மறைத்து வைத்திருந்த ஆயுதத்தால் முத்தநாதன் மன்னனைக் குத்துகிறான். அரவம் கேட்டுத் தத்தன் அறைக்குள் நுழைகிறான்.
அடப்பாவி! என்ன காரியம் செய்தாய்? உன்னை இப்போதே வெட்டி விடுகிறேன்.
சிவாய நம!!


மன்னா, நான் என்ன செய்யட்டும்?
நில்! தத்தா நில்! இவர் நம்மவர். அந்தச் சிவனே நேரில் வந்து என்னை ஆட்கொண்டது போல் சிவ வேடம் தரித்துள்ளார்.
இக்கோலத்தில் இவருக்கு எத்தீங்கும் வராது எல்லை வரைக் கொண்டு விட்டுவா. இது எனது ஆணை!
தங்கள் ஆணை மன்னா!
வஞ்சகன் முத்தநாதனைக் கொல்ல வந்த வீரர்களைத் தடுத்து நிறுத்தினான் தத்தன்.
வழிமறிக்காதீர்கள். எல்லை வரை இவரைப் பத்திரமாகக் கொண்டு விடவேண்டும் என்பது மன்னனின் கட்டளை!


வஞ்சகன் முத்தநாதனை எல்லையைக் கடந்து அனுப்பி விடுகிறான் தத்தன்.
சேதி நாட்டு எல்லை
பிழைத்துப் போ அற்பப் பதரே! கோழையே ஓடு!!
தத்தன் அரண்மனை திரும்புகிறான்
மன்னர் பிரானே! சிவவேடம் பூண்டவரை ஆபத்தின்றி அனுப்பி வைத்துவிட்டேன்
நன்று செய்தாய் தத்தா! அரசியாரே! இளவரசே! எல்லோரும் எப்போதும் சிவநெறி பூண்டு ஒழுக வேண்டும். ஓம்··· நம···சி..வாய!!
வானில் இடப வாகனத்தில் இறைவனும் இறைவியும் காட்சி அளிக்கிறார்கள்.
மெய்ப்பொருளாரே! சிவக்கோலத்தின் மீது நீர் கொண்ட பக்தியை உலகறியச் செய்யவே இந்நிகழ்ச்சி!! நீவீர் எமது திருவடி நிழலைச் சேர்ந்து உய்வீராக!!

## சொற்களஞ்சியம்

### ▶ தில்லைவாழ் அந்தணர் புராணம்

| | | |
|---|---|---|
| ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினியம் | = | வேள்விகளில் மூன்று வகை |
| அடியார் | = | சிவன் மேல் பக்தி கொண்டு தம்மை இறைவனுக்கு என்று அடிமைப்படுத்திக் கொண்டவர்கள். |

### ▶ இளையான்குடி மாறனார் புராணம்

| | | |
|---|---|---|
| உய்யும் | = | வாழும் (அ) சிவன் அருள் பெறுவதற்கு |
| உபாயம் | = | வழி |
| உன்னதம் | = | சிறப்பு |
| இயலாது | = | முடியாது |
| தரித்து | = | அணிந்து |
| முளை நெல் | = | விதை நெல் |
| கொல்லைப் புறம் | = | வீட்டின் பின்புறம் |
| கணத்தில் | = | சீக்கிரத்தில் |
| துயிலும் | = | தூங்கும் |

### ▶ மெய்ப்பொருள் நாயனார்

| | | |
|---|---|---|
| வழுவாது | = | தவறாது |
| துவண்டு | = | சோர்ந்து |
| சூழ்ச்சி | = | தந்திரம் |
| மெய்ப்பொருள் | = | தத்துவத்தைக் கூறும் நூல் |
| அரவம் | = | சத்தம் |
| இடப வாகனம் | = | காளை வாகனம் |
| உய்வீராக | = | வாழ்வீராக |




திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக்குழு, சிங்கப்பூர்

sivayanama.thirumurai@gmail.com
monacreativestudio@gmail.com
+91 94890 59659